பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

10 10 2024 6 45
வியாழக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்-</u>

1. செறிவூட்டப்பட்ட அரிசி வழங்கும் திட்டத்தை நீட்டித்திருப்பது, ஊட்டச்சத்துப் பாதுகாப்பை உறுதி செய்யும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.
2. பிரபல தொழிலதிபரும் டாடா குழுமத்தின் முன்னாள் தலைவருமான ரத்தன் டாடா உடல்நலக்குறைவால் மும்பையில் நேற்று இரவு காலமானார்.
3. தமிழகத்தில் வனப்பரப்பை 33 சதவீதமாக அதிகரிக்க தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மாநில வனத்துறை அமைச்சர் திரு பொன்முடி கூறியுள்ளார்.
4. தமிழகத்தில் ஒரு சில இடங்களில் இன்று கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.
5. உலகக்கோப்பை மகளிர் டுவெண்டி — டுவெண்டி கிரிக்கெட் போட்டியில் இலங்கை அணிக்கு எதிரான ஆட்டத்தில் இந்தியா 82 ரன் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

**[]<<<>>>[]**

செறிவூட்டப்பட்ட அரிசி வழங்கும் திட்டத்தை நீட்டித்திருப்பது ஊட்டச்சத்துப் பாதுகாப்பை உறுதி செய்யும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

மத்திய அமைச்சரவையில் நேற்று மேற்கொள்ளப்பட்ட முடிவுகள் குறித்து சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில் இதனை தெரிவித்துள்ளார்.

நாடு முழுவதிலும் பிரதமரின் கரிப் கல்யாண் திட்டத்தின் கீழ் செறிவூட்டப்பட்ட அரிசியை தொடர்ந்து வழங்க அரசு முடிவு செய்துள்ளதை சுட்டிக்காட்டி உள்ள அவர், இது மக்களின் ஆரோக்கியத்தை மேம்படுத்தும் என்று கூறியுள்ளார்.

ராஜஸ்தான் மற்றும் பஞ்சாப் மாநிலங்களின் எல்லைப்பகுதிகளில் புதிய சாலைகள் அமைக்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது அப்பகுதியில் போக்குவரத்து இணைப்பையும், வேலைவாய்ப்பையும் அதிகரிக்கும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

குஜராத்தின் லோக்தலில் தேசிய கடல்சார் பாரம்பரிய வளாகம் அமைக்க ஒப்புதல் அளித்திருப்பது சுற்றுலாவை ஊக்குவிக்கும் என்று திரு நரேந்திரமோடி கூறியுள்ளார்.

[]<<<>>>[]

பிரபல தொழிலதிபரும், டாடா குழுமத்தின் முன்னாள் தலைவருமான திரு ரத்தன் டாடா உடல்நலக்குறைவால் மும்பையில் நேற்று இரவு காலமானார். அவருக்கு வயது 86.

கடந்த சில நாட்களாக வயது மூப்பு காரணமாக ஏற்பட்ட உடல்நலக்குறைவால் மும்பையில் தனியார் மருத்துவமனையில் அவர் சிகிக்சை பெற்று வந்தார்.

சிகிச்சை பலனின்றி நேற்று இரவு ரத்தன் டாடா காலமானதாக டாடா குழுமத்தின் தலைவர் திரு சந்திரசேகர் தெரிவித்தார்.

1937-ஆம் ஆண்டு மும்பையில் பிறந்த அவர், 1991-ஆம் ஆண்டு முதல் 2012-ஆம் ஆண்டு வரை டாடா குழுமத்தின் தலைவராக பொறுப்பு வகித்தார்.

நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகளில் 30-க்கும் கூடுதலான டாடா நிறுவனங்களை அவர் நிர்வகித்து வந்தார்.

டாடா அறக்கட்டளை மூலம் கல்வி, அறக்கட்டளை, மருத்துவம், மக்களின் வாழ்வாதார முன்னேற்றம், கலை கலாச்சார மேம்பாடு உள்ளிட்ட சமூக பணிகளையும் அவர் மேற்கொண்டார்.

தமது நிறுவனத்தின் லாபத்தில் 66 சதவீதத்தை அறக்கட்டளையின் சமூக பணிகளுக்கு பயன்படுத்த அவர் வகை செய்தார்.

நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு முக்கிய ரத்தன் டாடா முக்கிய பங்காற்றியதுடன், ஏராளமான இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகளையும் உருவாக்கியுள்ளார்.

அவரது பங்களிப்புகளை பாராட்டி மத்திய அரசு இரண்டாயிரமாவது ஆண்டு பத்மபூசன் விருதையும், 2008-ஆம் ஆண்டு பத்ம விபூஷன் விருதையும் அவருக்கு வழங்கி கௌரவித்தது.

ரத்தன் டாடாவின் மறைவுக்கு தலைவர்கள் ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளனர்.

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு விடுத்துள்ள இரங்கல் செய்தியில், தொழில் வளர்ச்சியுடன், தேச கட்டமைப்புக்கும் பாடுபட்டவர் ரத்தன் டாடா என புகழாரம் சூட்டியுள்ளார்.

பிரதமர் திரு நரேந்திரமோடி விடுத்துள்ள இரங்கல் செய்தியில், தொலைநோக்கு பார்வைகொண்ட தொழிலதிபராக ரத்தன் டாடா திகழ்ந்ததுடன், அளப்பறிய சமூக பணிகளையும் ஆற்றியுள்ளதாகக் கூறியுள்ளார்.

நாட்டில் கல்வி, சுகாதாரம் உள்ளிட்டவற்றின் மேம்பாட்டுக்காக அளப்பறிய பணிகளை மேற்கொண்டவர் டாடா என்றும் குறிப்பிட்டுள்ளார்.,

தமிழக ஆளுநர் திரு ஆர் என் ரவி விடுத்துள்ள இரங்கல் செய்தியில், ரத்தன் டாடாவின் மறைவு தேசத்திற்கு பேரிழப்பு என கூறியுள்ளார்.

முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் வெளியிட்டள்ள இரங்கல் செய்தியில், முறையான தொழில் நெறிமுறைகளுடன் டாடா குழுமத்தை ரத்தன் டாடா மேம்படுத்தியதாகவும், அவரது பணி லட்சக்கணக்கானோர் வாழ்க்கையை மேம்படுத்தி உள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

ரத்தன் டாடாவின் மறைவுக்கு பல்வேறு அரசியல் கட்சிகளின் தலைவர்களும், தொழில் துறையினரும் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

**[]<<<>>>[]**

தனியார் மருத்துவக் கல்லூரிகளில் கூடுதல் கட்டணம் வசூலிக்கப்பட்டால் சம்பந்தப்பட்ட கல்லூரி நிர்வாகங்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு மா சுப்ரமணியன் கூறியுள்ளார்.

சென்னை கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனையில் அதிநவீன மருத்துவ உபகரணங்களின் பயன்பாட்டை நேற்று அவர் தொடங்கி வைத்தார்.

பின்னர் செய்தியாளர்ளிடம் பேசிய அவர், தனியார் மருத்துவக் கல்லூரிகளில் கூடுதல் கட்டணம் வசூலிப்பதாக புகார் அளிக்கப்பட்டால் கட்டண நிர்ணயக்குழுவுக்கு அது அனுப்பப்படும் என்றும், அந்த குழு உரிய விசாரணை மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கும் என்றும் கூறினார்.

**[]<<<>>>[]**

தமிழகத்தில் வனப்பரப்பை 33 சதவீதமாக அதிகரிக்க தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மாநில வனத்துறை அமைச்சர் திரு பொன்முடி கூறியுள்ளார்.

சென்னையில் நடைபெற்ற மண்டல அளவிலான வனத்துறை அலுவலர்களுடன் ஆய்வு மேற்கொண்ட பின், செய்தியாளர்களிடம் பேசிய அவர், யானைகள் மற்றும் புலிகளை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

வீட்டுவசதி வாரியத்தால் கையகப்படுத்தப்பட்டு 30 ஆண்டுகளுக்கும் மேலாக பயன்படுத்தப்படாமல் உள்ள நிலங்கள் மீண்டும் உரியவர்களிடம் ஒப்படைக்கப்படும் என்று மாநில வீட்டுவசதித்துறை அமைச்சர் திரு முத்துசாமி கூறியுள்ளார்.

ஈரோட்டில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், அதன் அடிப்படையில் இரண்டாயிம் ஏக்கர் நிலத்தை திரும்ப வழங்க ஆணை வெளியிடப்பட்டுள்ளதாகவும், மேலும் மூவாயிரம் ஏக்கர் நிலம் விடுவிக்கப்படும் என்றும் கூறினார்.

இதன் மூலம்நான்கு லட்சம் பேர் பயனடைவார்கள் என்றும் திரு முத்துசாமி தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

தமிழகத்தில் ஒரு சில இடங்களில் இன்று கனமழை பெய்யக் கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சேலம், கிருஷ்ணகிரி, தருமபுரி, திருப்பத்தூர், நாமக்கல், அரியலூர், பெரம்பலூர், கரூர், திருச்சி, திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒரு சில இடங்களில் கனமழை பெய்யக்கூடும் என்றும் அது கூறியுள்ளது.

பிற மாவட்டங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்பபு உள்ளதாகவும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதனிடையே சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் ஒரு சில இடங்களில் மிதமான மழை பெய்துள்ளது.

மழைக் காரணமாக குற்றால அருவிகளில் வெள்ளபெருக்கு ஏற்பட்டுள்ளதை அடுத்து, அருவிகளில் குளிக்க தடை விதிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**[]<<<>>>[]**

ஜப்பான் நாடாளுமன்றத்தின் கீழவையை கலைத்து அந்நாட்டுப் பிரதமர் திரு ஷிகெரு இஷிபா உத்தரவிட்டுள்ளார்.

**[]<<<>>>[]**

தில்லி தேசிய வன உயிரியல் பூங்காவில் மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை இணை அமைச்சர் திரு கீர்த்தி வர்தன் சிங் ஆய்வு மேற்கொண்டார்.

**[]<<<>>>[]**

சர்வதேச அஞ்சல் கூட்டமைப்பின் 150-வது ஆண்டையொட்டி உலக அஞ்சல் தினமான நேற்று புதுதில்லியில் அஞ்சல் துறை சார்பில் நினைவு தபால் தலை தொகுப்பு வெளியிடப்பட்டது.

[]<<<>>>[]

திருப்பூர் மாவட்டத்தில் ஏற்பட்ட சாலை விபத்தில் உயிரிழந்த நான்கு பேரின் குடும்பத்தினருக்கு தலா இரண்டு லட்சம் ரூபாய் நிவாரண உதவி வழங்கப்படும் என முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் கூறியுள்ளார்.

[]<<<>>>[]

சென்னை மாநகர போக்குவரத்துக் கழகத்துக்கு 25 புதிய தாழ்தள சொகுசு பேருந்துகளை மாநில போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு சிவசங்கர் நேற்று தொடங்கி வைத்தார்.

[]<<<>>>[]

தேனியில் கல்லூரி மாணவ மாணவிகளுக்கான சிறப்பு கல்விக் கடன் முகாம் இன்று நடைபெறும் என்று மாவட்ட ஆட்சியர் திருமதி ஷஜீவனா தெரிவித்துள்ளார்.

[]<<<>>>[]

விழுப்புரத்தில் தோட்டக்கலைத் துறை சார்பில் நடைபெறும் பாரம்பரிய காய்கறிகள் சாகுபடி தொடர்பான இரண்டு நாள் கருத்தரங்கை மாவட்ட ஆட்சியர் திரு பழனி தொடங்கி வைத்தார்.

[]<<<>>>[]

மெட்ரோ ரயில் பணிகளையொட்டி சென்னை கத்திப்பாரா மேம்பாலப் பகுதியில் நாளை முதல் 14-ம் தேதி வரை சோதனை அடிப்படையில் போக்குவரத்து மாற்றம் செய்யப்படுவதாக சென்னை மாநகர போக்குவரத்துக் காவல்துறை தெரிவித்துள்ளது.

[]<<<>>>[]

உலகக்கோப்பை மகளிர் டுவெண்டி – டுவெண்டி கிரிக்கெட் போட்டியில் இலங்கை அணிக்கு எதிரான ஆட்டத்தில் இந்தியா 82 ரன் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

துபாயில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் முதலில் பேட் செய்த இந்தியா நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் மூன்று விக்கெட் இழப்புக்கு 172 ரன் எடுத்தது.

173 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய இலங்கை அணி 19 புள்ளி ஐந்து ஒவரில் 90 ரன் மட்டுமே எடுத்து தோல்வியடைந்தது.

**[]<<<>>>[]**

சென்னையில் நடைபெற்று வரும் முதலமைச்சர் கோப்பைக்கான மாநில விளையாட்டுப் போட்டிகளில் ஒன்பது தங்கப்பதக்கங்களுடன் சென்னை மாவட்டம் முதலிடத்தில் உள்ளது.

ஆறு தங்கப்பதக்கங்களுடன் செங்கல்பட்டு இரண்டாவது இடத்திலும், ஆறு தங்கப்பதக்கங்களுடன் ஈரோடு மாவட்டம் மூன்றாவது இடத்திலும் உள்ளன.